சுருக்கம்

தொழில் – 2015–2016–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வெர்மிடைல் எனும் வெப்பம் தாங்கி மேற்கூரை ஓடுகள் கிராபைட் கழிவுப் பொருட்களுடன் எரி சாம்பல் மற்றும் பைண்டர்கள் முதலியவற்றை உபயோகித்து கிராபிடைல் எனும் நடைபாதை ஓடுகளை உற்பத்தி செய்ய ரூ.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் நிறுவ ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழில்(எம்எம்இ.1)துறை

அரசாணை (டி) எண். 158

நாள் : 07.09.2015
மன்மத, ஆவணி – 21
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கப்பட்டது

**ஆணை :**

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தொழில்துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் வெர்மிடைல் எனும் வெப்பம் தாங்கி மேற்கூரை ஓடுகள் கிராபைட் கழிவுப் பொருட்களுடன் எரி சாம்பல் மற்றும் பைண்டர்கள் முதலியவற்றை உபயோகித்து கிராபிடைல் எனும் நடைபாதை ஓடுகளை உற்பத்தி செய்ய ரூ.50 இலட்சம் செலவில் இயந்திரங்கள் நிறுவப்படும்"

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு கனிம நிறுவன நிதியினைக் கொண்டு குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கனிம நிறுவனம் அவர்களை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.வி. சங்கர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
சென்னை–600 005.

நகல்
மாண்புமிகு தொழில்துறை மற்றும் போக்குவரத்துத் துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
தொழில்(அ.ந.மு.2.1/வ.செ.தி.1)துறை, சென்னை–9.
இ.கோ/உ.நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/9/2015

பிரிவு அலுவலர்.